| வாக்குகள் விபரம் | |
|---|---|
| திரு. செல்வநாயகம் | 25,927 |
| திரு. பொன்னம்பலம் | 9,457 |
| திரு. அம்பலவாணர் | 185 |
| பழுதடைந்த வாக்குகள் | 168 |
| பெரும்பான்மை வாக்குகள் | 16,470 |


சுதந்திரன்
SUTANTIRAN
தொலைபேசி 23411. விலை: சதம் 60
வள்ளுவர் ஆண்டு 2005, தை 27, முஹறு: 27 (9-2-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 25


# தந்தைக்கு மாபெரும் வெற்றி!

காங்கேசன் துறை இடைத்தேர்தலில் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும்—புதிய அரசியல் சட்டத்தை நிராகரிக்குமாறு கோரியும் போட்டியிட்ட 35 இலட்சம் ஈழத்தமிழ் மக்களின் ஒப்புயர் வற்ற தனிப் பெருந்தலைவர்—மூதறிஞர் தந்தை செல்வாவின் கழுத்தில் காங்கேசன்துறைத்தொகுதிமக்கள்வரலாற்றுப் பெருமைமிக்க மாபெரும்வெற்றி மாலையைச் சூட்டி தமிழ் இனத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளனர்.

## புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நிராகரித்தனர்!

1972-ம் ஆண்டு மே 22ம் நாள் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் சட்டத்தை இந்நாட்டுத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; அச்சட்டம் தங்கள் கழுத்தில் போடப்பட்டுள்ள சுருக்குக் கயிறு என்பதை உணர்ந்து—

**தந்தை பெற்ற அதிகப்படி வாக்குகள் 16,470**

அவர்கள் அதை முற்ருக நிராகரித்துவிட்டார்கள் என்பதை இந்த இடைத் தேர்தல் முடிவு மூலம் காங்கேசன்துறை தொகுதி வாக்காளர்கள் அரசுக்கும், அகிலத்துக்கும் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள்.

## வி. பி. மண் கவ்வினர்!

புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலம் மண்கவ்விஞர்!

இடைத் தேர்தல் முடிவை அறிவதற்காக யாழ் நகரில் திரண்டிருந்த பதினையாயிரத்துக்கு மேற்பட்ட எழுச்சிகொள் தமிழர் கூட்டம்—தந்தையின் வெற்றிச் சேதி கிடைத்ததும் ஆனந்த மிருதியால் மகிழ்ச்சியாரவாரம் செய்ததுடன்" தந்தை செல்வா வாழ்க! தமிழர் கூட்டணி வாழ்க! தமிழ் ஈழம்—தனிநாடு அமைப்போம்" என்று எழுப்பிய ஆவேச முழக்கம் மண்ணையும் விண்ணையும் அதிரவைத்தது.

இந்த இடைத்தேர்தலில் அரசு வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. வி. பொன்னம்பலத்துக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்காக தென்னிலங்கையிலிருந்து ரத கஜ துரக பதாதிகளுடன் காங்கேசன்துறை வந்து கூடாரமடித்திருந்த ஐக்கிய முன்னணி அமைச்சர்கள், பிரமுகர்களின் முகத்தில் தங்கள் தீர்ப்பு மூலம் காங்கேசன்துறைமக்கள் கரி பூசி விட்டதுடன்—தந்தை செல்வாவின் தலைமையில், தமிழர் கூட்டணியின் வழிகாட்டுதலில் தமிழினம் தனது சுதந்திரத்தை பெற்றே தீரும் என்பதையும் அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டிவிட்டனர்!

அமைச்சர்கள் பீட்டர்கெனமன், குமாரசூரியர், கே. பி. இரத்நாயகா, ரி. பி. இலங்கரத்திஞ, கொப்பேகடுவ, ரி. பி. சுபசிங்கா, கொல்வின் ஆர். டி. சில்வா சுவாமிநி என். எம். பெரேரா, ஆகியோருடன் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, அனுரா பண்டாரநாயகா, ஏலியன் நாணயக்காரா, குமார் ரூபசிங்கா, சரத் முத்தட்டுவேகம, போன்ருேர் தென்னிலங்கையிலிருந்து வடக்கே சென்று வி. பொன்னம்பலத்துக்காக பிரச்சாரம் செய்தும்—மக்கள் இவர்களது பொய்ப்பிரச்சாரங்களிலும், [illegible]



## ஆணவத்தை வீழ்த்திய தானைத் தலைவர்!

### தேர்தல் முடிவு வெளியானதும் கூடிநின்ற மக்கள் மத்தியில் நன்றி கூறிஞர்!

மூதறிஞர் செல்வா தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் — "இத்தேர்தல் முடிவின் மூலம் புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனர்."

"நாட்டின் சுதந்திரத்தின் மூலம் மீண்டும் பெற்ற அரசுரிமையை தமிழ் ஈழத் தேசிய இனம் தானேஉபயோகித்து தன் சுதந்திரத்தை நிலைநாட்ட எனக்குக் கொடுத்த கட்டளையே காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவாகும்."

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கவிருக்கும் புதிய தமிழ் ஈழத்துக்கு ஆக்கம் தந்துகொண்டிருக்கும் அண்ணாவின் அறிவுரைகள்!

இருப்பது ஒரு உயிர். அது இருப்பதும் ஒருமுறைதான். அந்த இன்னுயிரை என் தாயகத்தின் விடுதலைக்காக தத்தம் செய்வதில் பெரிதும் பெருமையும் இறுமாப்பும் அடைவேன் என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞரின் பேராற்றல்மிக்க இந்தஉயிர் ஊட்டமான சொல்லமுதம், தூங்கிக்கிடந்த தமிழகத்தின் புரட்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்தியது.

ஆரிய மாயையிலும் வடநாட்டு வல்லூறுகளினது மோகத்துக்கும் தன்னை கொத்தடிமையாக்கிக் கொண்ட தமிழகம், தன் வரலாற்றை மறந்து, பண்பாட்டையிழந்து, பகுத்தறிவை முறித்துக்கொண்டு அறியாமை என்ற இருளில் அல்லலுற்ற பொழுது தமிழர்களின் வரலாற்றின் வரம்பைத்தொட்டுக்காட்டி பண்பாட்டின் மாண்பை பருத்துரைத்து, தமிழர்களின் தனித்துவத்தை தரணிக்கு தந்ததிசர் தமிழில் அண்ணா எடுத்துக் கூறிய பொழுது, தமிழகத்திலும், உணர்ச்சியொடு உத்வேகத்தோடு கிளம்பியது.

அறிஞர் அண்ணா தன் சிந்தனைக் கதிர்களை விரித்த பொழுது, பிற்போக்கு வாதிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும், அவரின் சீரிய சிந்தனைக் கதிர்கள் அல்லலையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. இவ்வகை அலைந்தும் அண்ணாவின் சொற்கோலத்துக்கு முன்னால் ஆளாகி இருந்த இடமே இல்லாமல் போய்விட்டது. அவருடைய மறுமலர்ச்சிக்கொள்கைகளின் மாண்புகள் குறிப்பாக மனரும் இனிய சமுதாயத்திடம் வேகமாக வேரூன்றியது. அதனால்தான் அண்ணா அன்றும் இன்றும் தமிழர்களின் உள்ளங்களிலெல்லாம் ஒளி உமிழும் உதய சூரியனாக வாழ்கின்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் அலர் காலத்தில் தமிழகத்தை இன மத பேதமற்ற ஒரு சாம்ராஜ்யமாக கட்டி



எழுப்ப எண்ணினார். அண்ணா ஏற்படுத்திய புரட்சிக் கனல் இன்று தமிழர்களிடத்தில் தீவிரமாகவும் தீட்சண்யமாகவும் பற்றிப்படரத் தொடங்கியுள்ளது. குறிப்பாகவும் வெகு சிறப்பாகவும் தமிழ் ஈழத்தில் இந்த உணர்வு தன்னைத்தானே ஆளும் தன்னாட்சிக்கு ஆக்ரோசமாக அழைத்துச்சென்றுள்ளது.

பேரறிஞர் கூறியதுபோல் சுதந்திரமாகவும், சுபிட்சமாகவும் வாழத்துடிக்கும் ஒரு இனத்தை அடக்கி ஒடுக்கி அல்லல்படுத்துவது வெடிக்கும் எரிமலைமேல் வீடுகட்ட நினைப்பதாகும். அண்ணாபுகன்ற இந்த அருளவாக்கு இன்றைய ஈழத் தமிழருக்கு மிகவும் பொருத்தமாகும்.

அண்ணா காட்டியவழி நமக்கு மிகவும் பொருத்தமானது. நமது தன்னாட்சிக்காக எமது கொடி மீண்டும் எமது மண்ணில் ஒளிகொட்டிப் பறந்தாட எவ்வளவு உயிர்கள் வேண்டுமானாலும், எத்தனை உடல்கள்வேண்டுமானாலும் எமது தாயகத்தின் தங்க நிகர் மண்ணுக்கு எருவாக்க இலட்சோப லட்சம் பேர் காத்திருக்கின்றோம். மாற்றார்களின் துப்பாக்கிகளிலிருந்தும் பீரங்கிக் குழிகளிலிருந்தும் வரும் முடை நாற்றத்திலிருந்தும் தான் எங்கள் சுதந்திரம் உதயமாகவேண்டுமென்றால் — நாம் தயார்!

இது வெறும் உணர்ச்சி வேக்காடுகளைக் கொண்ட சொற்களல்ல, பேரறிஞர் அண்ணா பிறப்பித்த அரசியல் பாடம். அந்தப்பாடத்தில் நாம் படித்தவைகளெல்லாம் ஜனநாயகக் கருத்துக்களும் சுதந்திர உணர்வுகளுமே! அவர்காட்டிய வழி நின்று ஆட்சிசெய்து வர்க்க பேதமற்ற தமிழ் சாம்ராஜ்யத்தை இந்த உலகத்தில் கட்டி எழுப்புவதே எமது அசையாத கொள்கைக்காக எவ்வளவு தியாகமும் செய்யக் காத்து இருக்கின்றோம்.

அண்ணாவின் கருத்துக்களையும் அவர் காட்டிய வழிகளையும் எந்தக்கோணத்தில் வைத்து ஆராய்ந்தாலும் அவர் இந்த நூற்றாண்டில் தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் கிடைத்த அற்புதமானதொரு தலைவராகும். எனவே அவரை தனியனிதராக அல்லாது ஒரு சகாப்தமாக புரட்சிமிக்க கருத்துக்களைப் போதித்த ஒரு வழிகாட்டியாக நாம் என்றும் ஏற்றுக் கொள்கின்றோம்.

**கல்முனை நீ. செல்வராசா**

# இடைத் தேர்தல் பிரசாரத்தை பொறுப்பேற்று நடத்தியவர்கள்!

35 இலட்சம் தமிழினத்தின் சார்பில் காங்கேசன்துறை தொகுதியில் படைபலம், பணபலம், ஆதிக்க பலம் அதிகாரபலம் கொண்ட சிங்கள ஏகாதிபத்தியத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் வேட்பாளர் பொன்னம்பலத்தை வீழ்த்தி வெற்றிவாகை சூடியுள்ள மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு ஆதரவாக ஊண் உறக்கம் மறந்து, அலுப்பு சலிப்பின்றி ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்த தொண்டர்களும், தலைவர்களும் தமிழினத்தின் சார்பில் வாழ்த்தப்பட வேண்டியவர்கள்; போற்றப்பட வேண்டியவர்கள்!

இடைத்தேர்தல்பிரசாரத்துக்கு பொறுப்பேற்று—ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பாக இருந்து பணியாற்றியவர்களின் பெயர்களை இங்கு தருகிறோம்.

**மாதகல்**

அ. அமிர்தலிங்கம், தா. திருநாவுக்கரசு, ச. சிவனடியார், ச. ஏரம்பமூர்த்தி,

**பெரிய விளான் இளவாலை**

சே. மா. செல்லத்தம்பு பா. உ. த. ம. பிற்றர் பொன்கலன், ச. ஜெயநாசா.

**அளவெட்டி தெற்கு மல்லாகம்**

வி. தருமலிங்கம் பா. உ, தா. சங்கரப்பிள்ளை, சு. ஸ்ரீ பாஸ்கரன்.

**அளவெட்டி வடக்கு**

கா. பொ. இரத்தினம் பா. உ., மு. திருநாவுக்கரசு

**இளவாலைகருகம்பானை கீரிமலை**

சி. கதிரவேற்பிள்ளை பா. உ., இ. விசுவநாதன்.

**பன்னாலை கொல்லங்கலட்டி**

வெ. யோகேஸ்வரன், வ. ந. நவரத்தினம் பா. உ.

**தெல்லி கிழக்கு விராங்கொடை**

[illegible] கரன்.

**தெல்லிப்பழை கிழக்கு**

க. ஜெயக்கொடி பா. உ., அ. தங்கத்துரை பா. உ.

**மாவிட்டபுரம் வீமன்காமம்**

மு. ஆலாலசுந்தரம், ந. அருணாசலம்.

**காங்கேசன்துறை**

செ. இராசதுரை பா. உ., அ. குமாரகுரு, தா. திருநாவுக்கரசு.

**மயிலிட்டி பலாலிக் கரை**

க. துரைரத்தினம் பா. உ. ச. ஞானமூர்த்தி, வ. இ. இராமசாமிப்பிள்ளை, கனகமனோகரன்.

**மயிலிட்டி வடக்கு தெற்கு குரும்பசிட்டி**

வி. ஆனந்தசங்கரி பா. உ., சி. நாகராசா.

இவர்களுடன் சேர்ந்து தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த வீர இளைஞர்களும் பேரவை செயலாளர் அ. வரதராசன் தலைமையில் பிரசாரவேலைகளில் ஈடுபட்டனர்!

காங்கேசன்துறை இடைத் தேர்தலையொட்டி மல்லாகத்தில் இயங்கிய தமிழர் கூட்டணியின் மத்திய தேர்தல் பணிமனையின் பொறுப்பாளர்களாக திரு. சு. நடராசா அவர்களும், சி. சிவமகாராசா அவர்களும், சுறுசுறுப்புடன் இயங்கிப்பிரசார வேலைகளை நிரையப்படுத்தி தொண்டர்களை செயற்பட வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் முடிந்தது...!

காங்கேசன்துறைக் களத்தினில் தமிழர்
ஆங்காங்கே திரண்டு அணிவகுக்கின்றனர்...
பூங்குயிற் கீதம், புரட்சிப் பேச்சுகள்
ஓங்காரத்தொனியின் ஊரேலாம்முழங்குது—"

தங்கத் தமிழர்கள் தானைத் தளபதி
எங்கள் செல்வா எழுந்து நிற்கின்றார்
அங்கே அமைதி, அனைவரும் நோக்குறார்
சிங்கக் கிழவர்—சிரித்தே பேசுகிறார்...

தாங்கக் கவிஞன் தமிழ் கர்ஜித்தான்
"பொங்கடா தமிழா பொங்குக" என்கிறான்
ஆயிரமாயிரம் அணிதிரண்டுள்ளோர்
தாயின் கொடி கீழ் தலை சாய்ந்திருந்தனர்

கொப்புக் குஞ்சுகள்—நீல நஞ்சுடன்
அகப்பையின் கீழே அடிமைபேசுது!

முற்போக் கெனவே முழங்குது ஒன்று
பிற்போக் கெனவும் பிதற்றுது ஒன்று
மற்போர்புரியும்—மறவர் பாணியில்
அற்பப் பிறவிகள் அடித்துப்பேசுறார்!

தேர்தல் முடிந்தது தெருவெலாம் தமிழ்த்தாய்
ஊர்வலம் போகிறாள் — உலுத்தர்கள் பு[illegible]

—திருக்கோணமலைக் கவிராயா

காங்கேசன் இடைத்தேர்தல் பற்றிய
அரசியல் விமர்சன நூல்
(ஆங்கிலத்தில்)

A REFERENDUM
(Reflections on the K. K. S. By-election)
by
**Karikalan**

Published by: V. DHARMALINGAM, m. p.
Available at:
(1) GREENLANDS HOTEL
Bambalapitiya.
(2) RAJESWARI BAWAN
Opposite Fort Rly. Station, Colombo.
(3) S. KRISHNASWAMY
News Agent, Grand Bazaar, Jaffna.
Correspondence: 34/1, Meeraniya Street,
Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்த் தேசம்' உருவாகட்டும்!

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் அண்மையில் விடுதலை வேட்கையுடன் போரிட அறிகை முழக்கமிடத் தொடங்கியுள்ளனர்! அந்நாட்டின் இளந்தமிழரிடம் விடுதலைப் போர் விழைவு கனிந்தும், மிகுந்திருந்தும் அவர் தம் அரசியல் தலைவர்களை அவர்களை மிதப் படுத்தி பதமாக அமைதி நெறி வழியில் இட்டுச் சென்று கொண்டிருந்தனர். ஆனால் இப்போதோ தலைவர்களே இளந் தலைமுறையின் வெஞ்சினத்தையும் போர் உரனையும் சற்றே வெளிப் படுத்தி வருவது குறிப்பிடத் தகுந்தது! இதனைக் கண்டு நம் நெஞ்சங்கள் பெருமகை யால் நிறைகின்றன!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் பிரிந்தும், சிதைந்தும், வீழ்ந்தும், நலிந்தும், திரிந்தும் குலைந்த இந்தத் தமிழினத்தின் இடையே திதனப்பால் அவிரொளிக்கொழுந்து மெல்ல எரியத் தொடங்குவதைக் கண்டு நமக்கு இனி மகிழ்வும், விரிப்பும் ஏற்படுகின்றன.

## இலக்கியம் கூட்டும் வீழ்ச்சி

தமிழினத்தின் வீழ்ச்சிக் காலத்தில், பிற நாகரிகப் பண்புகளின் வீச்சுக்களில் இடிபட்டு அழற்சேறுபட்டுத் தன்மையைச் சுற்ந்து கொண்டிருந்த காலத்தில் எழுந்த புறநானூறு, பாவிய (காவிய) நூல்களை, இலக்கண நூல்களைப் பாருங்கள்! எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை போன்ற நூல்கள் காட்டுவன எவை? தமிழினத்தின் உயர்பாட்சி, நாகரிகச் செழுமை, செல்விய பண்பாடு, பொதுநல வேட்கை, அறிவியக்கம், பொன்றலநிலை அல்லவா? இவ்விலக்கியங்கள் கோடிட்டுச் சுட்டுவதை உணரும் தோறும் என்ன நினைக்க முடிகின்றது? இனத்தின் வரலாறு படிப்படியாக பல கட்டங்களில் சட்டென்றும், சரிந்தும், இருப்பியும் மாறி வருவதைக் கண்டுகொள்ள முடிகின்றதல்லவா?

## ஆஸ்திரேலியா முதல் பிலிப்பைன்ஸ் வரை!

வரலாறும், நிலநூலும், மண்ணியலும், மனிதவியலும், கடலியலும் பழந்தமிழினின் தோற்றம், பரப்பு, எழுச்சி ஆகியவற்றைக் காட்டுவதைப் பார்க்கும் போது நமக்கு வியப்பும், மலைப்பும் உண்டாகின்றன அல்லவா? ஆஸ்திரேலியா முதல் பிலிப்பைன்ஸ் வரை, இமயம் இந்துமாக் கடலின் தென் எல்லை வரை பரந்திருந்த நிலப்பரப்பில் தமிழினம் பேரரசு விரித்திருந்த காலத்தை எண்ணுகையில் நம் நெஞ்சங்களில் பூரிப்பும் இன்பமும் பொங்கு மிகுதியாய்ப் பாய்கின்றன! பழங்குமரிப் பெருநிலம் கடல்கொண்ட பின்னும் பல ஆயிரம் ஆண்டுகள் எஞ்சிய இப்பரப்புகளில் தமிழனின் ஆட்சி நிலவு தோன்றிய பெற்றிமையை என் சொல்வது?

## நாம் இழந்த நாடுகள்!

ஆனால் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் நிலை என்ன? ஆங்கிலேயர் வருகை — போர் வீரம் மிகுந்தவர்களின் கொழுந்து அந்நியப் பரப்பை வெள்ளையர்களிடம் இழந்தோம்! பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளை அரபிய—பாரசீய — மங்கோலிய இனங்களின் இருப்புகளாக விட்டுவிட்டோம்! தமிழ் இந்தியாவையோ வட இந்தியர்களுக்குக் — குறிப்பாக விந்தியத்தின் வடக்கே உள்ளமாநிலங்களின் ஆளுகைக்குள்ளான பரப்பாக இழந்து விட்டோம்! இலங்கையையோ சிங்கள ஆதிக்கத்திடம் இழந்திருக்கிறோம். ஓராயிரம் ஆண்டுகள் வரலாறு கூட இல்லாத இனங்களிடம் தான் தமிழினம் மண்ணிழந்து, மறுபிறந்து, மாண்

முடியாமல் திணறும் இத் தமிழ்ச் சமுதாயத்தைக் கண்டு மனம் இரங்குவதா? வேடிக்கைதான் என நினைத்து சிரித்துமறப்பதா?

இலங்கை தமிழனின் தாயகம். அவன் உயிர்த்த இடம்! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தமிழன் ஆண்ட நாடு! ஆனால் இந்நாளைய நிலைமை என்ன? சிங்களவரின்—இடையே உருவான இனத்தின் வல்லாட்சிக்குள் இலங்கை அடங்கிவிட்டது!

> ஈழத் தமிழினத்தின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரித்தும் தனிநாடு பெற்றாலே தமிழன் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை ஆதாரங்களுடன் விளக்கியும்— சென்னையிலிருந்து வெளிவரும் 'உரிமை வேட்கை' வார இதழில் திரு. செம்பியன் அவர்கள், (30—12—74ல்) தீட்டியுள்ள கட்டுரையை சுதந்திரன் வாசகர்களுக்காக இங்கு தந்திருக்கிறோம்.
>
> 'உரிமை வேட்கை' தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களின் அறக்கட்டளையிலிருந்து வெளியிடப்படுவதென்பதும் இந்த ஏட்டில், இலங்கைத் தமிழர் பிரச்சினையை விமர்சித்து திரு. செம்பியன் அவர்கள் முன்பு தொடர்கட்டுரைகள் எழுதி வந்ததும், அக்கட்டுரைகள் சுதந்திரன் ஏட்டில் மறு பிரசுரம் செய்யப்பட்டன என்பதும் வாசகர்கள் அறிந்ததே.
>
> —ஆசிரியர்.

பிறந்து, அடிமையுற்று ஏங்கி அல்லலுடன் கவன்று கலங்கி இன்று தமிழ் சாகின்றது!

## அடிமை வாழ்வு!

ஐரோப்பியன்—வெள்ளைக்காரன் உலகத்தைத் தன் வயப்படுத்த பீரங்கியும் துப்பாக்கியும் எடுத்துக் கொண்டு அலைந்தபோது தமிழன் உலகப்பொதுமை பேசியும், 'அகம்' படித்துப், சிலை வடித்தும், கோபுரங்களை வானளாவ நிறுவிக் கொண்டும் இருந்தான்!! இவன் உள்ளத்தில் ஆதிக்க உணர்வும், போர் அவாவும், 'நிலப்பற்றி' வேட்கையும் இருந்ததில்லை. பல ஆயிரம் ஆண்டுகளாக இவனிடம் ஊறிய மனிதநல இயல்புக் கூறுகள் மலர்ந்தும் காழ்த்தும் இருந்த இவ்வாண்டுகளில் ஐரோப்பியனின் வீரகாண்மை, கூரிய அறிவுநுட்பம், இவனுடைய நிலத்தையும் பொன்னையும் விழுங்கி விழுங்கி செரித்தன. இச் சமுதாயத்தின் உடன் பிறப்பு உறவான திராவிட மக்கள், தொகையில் பெருகியும் பரந்தும் இருந்தும் இவனுள் தன் ஆட்சியை நிறுவிக் கொள்ளும் உரனின்றி உய்யும் முறை அறியாது முற்றும் சோம்பியும் கூம்பியும் கூனிக்குறுகியும் 'தெருக் கூத்து—வாழ்வுக்கு' த்தன்னை தள்ளிக்கொண்டு விட்டான்.

பழந்தமிழ் நூல்கள்பேசிய 'அறவுணர்வு மிஞ்சிய மறம்' இவனுக்குத் தீங்கு விளைவித்து கோழையாக்கி விட்ட பின்னர் நேர்மைத் திறம் பேசி கதைத்தே காலம் போக்கினன்.

இவனுடைய வரலாற்றுத் திருப்பங்கள் என்பவை எல்லாம் இவன் குப்புற தலைகவிழ்ந்தும், அமிழ்ந்தும், புதைந்தும், மட்கியும் பின் சற்றே தெளிந்தும் துளிர்த்தும் எழுந்தவைதான்! இவனை வெள்ளையனும், மங்கோலியனும் அரபியக்காரனும் விலைபேசும் அளவுக்கு இவனிடம் அனைத்துச்சிறப்புகளும் குன்றி கருகிதுதொல்பொருள் ஆய்வுக்குரியன!

தன் பழந்தாய் [illegible] விலே வேரோடி [illegible] தன்னைக்கவ்விய ஆதிக்கங்களின் கட்டினின்றி மீ[illegible] எழ

அதன் ஆதிக்கம் ஆண்டு தோறும் வலுப்பெற வலுப் பெற அங்கே தமிழன் தொகை சிறுத்தது. அவனோ இன்று இச் சிங்கள ஆதிக்கத்தின் கைகளில் சிக்குண்டு, மீளும் திறவில்லாமல் திணறி திணறி விழிக்கின்றான்.

ஏறக்குறைய இந்த இருபத்தைந்தாண்டுகளாக இலங்கைத் தமிழர் அந்நாட்டில் சிங்கள ஆதிக்கம்நெருக்கும் நெரிசலில் திமிறிப் புரண்டு வரும் அவலத்தை நாம் காணப் பொறுக்க முடியவில்லை! சிங்களவரின் ஏதேச்சாதிகார ஆட்சி நாளாக நாளாக வளர்வதை யெடுக்க சிறிய தடுப்பரணைக்கூட தமிழர் இடவியலாமல் போனதுதான் நமக்குப்பெரியவேடிக்கையாக உள்ளது.

இலங்கைத் தமிழரின் அடிமையைப்போக்கும்தீர்வுக்கு இவ்வுலகில் வேறு எப்பகுதியினரும் முன்வரவில்லை, இந்தியத் தமிழர் அதாவது தமிழ் நாட்டுத் தமிழரின் துணையேனும் அவர்க்குண்டா எனில் அதுவும் இம்மியளவும் இல்லை!

தமிழ்ச் சமுதாயம் ஒன்று தான் இவ்வுலகிலேயே தன்னைத் தானே வீழ்த்திக்கொள்வதில் பெருமை கொண்ட இனம்! தன் மேலேயே வஞ்சகத்தைப் பாய்ச்சிக் கொண்டு விதங்கிச் சீழ் வடிக்கும் சமுதாயம் ஒன்று இருக்கும் எனின் அது தமிழ்ச் சமுதாயம்தான்!

இலங்கைத் தமிழர்களின் மரண ஒலி கேட்டும் வாளாமுகந்திருப்பி தன் வீட்டுச் சலிப்புகளையே அசைபோட்டுக்கொண்டுள்ளது இந்தத் தமிழ் நாட்டுச் சமுதாயம்! இலங்கைத் தமிழர்க்கெனவழக்காட, போராட, உறுதுணையாய் வர எவரும் இல்லாமல் போனது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான்.

## தமிழ்த்தேசம்!

இலங்கைத் தமிழர் தம் சொந்த ஆற்றலிலேயே தனி ஆட்சியை அதாவது [illegible] பெறுவதை இலக்காகக் கொண்டு போராட இப்

போது முடிவுசெய்துள்ளனர். தமிழரசுக் கட்சியின் இருபத்தைந்தாண்டாம் விழாவில் தமிழ் ஒன்றிய முன்னணி (Tamil United Front) 'தமிழ்த் தேசத்'தின் விடுதலை வேண்டிப்போராடப் போவதாக அதன் பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

"தங்களுக்குச் சொந்தமான நாட்டில்தான் தமிழர்கள் மானத்துடன் வாழமுடியும்" என்ற அவருடைய சொற்களும் தமிழ் ஒன்றிய முன்னணியின் விடுதலைமுழக்கமும் இலங்கைத் தமிழர்களின் நெஞ்சங்களை முழுமையாக எதிரொலிப்பவை!

இலங்கை தம்தாய் நாடாதலின் சிங்களவர் வெளியேற்றப்படவோ அல்லது சமநெறி நோக்கில், மனிதநலன் கருதி, சிங்களவர்க்குச் சமவாய்ப்பு தமிழர் விரும்பித் தரவோ வேண்டிவதுபோய், தமிழர் வடகிழக்கு இலங்கையை மட்டும், தம் தனி நாடாகவே வேண்டி அயலவராகிய சிங்களவரிடம்(!) போராடப் போகும் நிலை கருதி வெட்கமுடன் வெம்ப வேண்டியதுதான்!

இருப்பினும் தமிழர்க்கு வடகிழக்குஇலங்கையேனும் எஞ்சட்டும்! தமிழ் ஒன்றிய முன்னணியின் விடுதலைப் போரின் வெற்றி அங்கேயுள்ள இளந்தமிழரின் செயலாக்கத்தில்தான் உள்ளது.

## தனிநாடு உருவாகட்டும்!

ஐரோப்பியர்க்கே உரிய திட்ட அறிவுடன், தம் இலக்கை எண்ணிக் கடுமையாகச் செயல்பட்டால் வடகிழக்கு இலங்கை பிரிவது உறுதி! அவர்கள் விழையும் 'தமிழ்த்தேசம்' விரைவில் உருவாகும்! அறிவியல் மனப்பான்குடன், உயரிய இராணுவக் கட்டுக்கோப்புடன் இலங்கை இளந் தமிழர்! அணிவகுத்தால் தமிழனுக்கென்று உலகில் 'நாடு' உருவாகும்! உலகரங்கில் தமிழன் தலை நிமிரலாம்! உலகெங்கும் உள்ள தமிழ்ப் பெருங்கூட்டத்திற்குஉரிமை நலன்கள் பல எளிதாகச் சேர்க்க இயலும்!

இந்தக்கொள்கையே—
தமிழனுக்கு மாண்பு கூட்டும்

**செம்பியன்**

# வெற்றி மாலை விழுந்தது!

வெற்றி மாலை விழுந்தது செல்வாவின் கழுத்திலே!
வேண்டுமென்று வந்தவர்க்கோ பட்டை நாமம்
விழுந்தது!
சுற்றிமாலை விழுந்தது சுதந்திரனும் செல்வாவுக்கு!
சிறுமைத்தனம் வந்தது "மாஸ்கோவின்" நேசருக்கு!
கற்பனைமாலை விழுந்தது கதறிக் கதறி ஓடவே
காட்டிக்கொடுத்த தோழருக்கோ காசு பணம்
தேய்ந்தது!
விற்பனை மாலை வந்தது வீடுவெல்ல ஒளித்தது!
வானத்து நட்சத்திரம் மண்ணில் எரிந்து விழுந்தது!

கட்டுக்காசைக் காப்பாற்றவே கதறிக் கதறி ஓடுகிறார்!
கொட்டப்பாக்குச் சிதறுவதாய் அங்குமிங்கும்
உருளுகிறார்!
மொட்டவிழாப் புதுமலராய் நின்றவாரம் செல்வாவை
முட்டிமோதி விழுத்தாட்ட வந்தவரோ ஓடுகிறார்!
கட்டவிழ்த்த காளையோடு போர் செய்ய வந்தவரோ
கத்திக்கத்தி ஓடுகிறார் தென்னிலங்கை நாடுகிறார்!
விட்டுவிட மாட்டேன் என விருப்புப் பேசியவர்
வீடுவெல்லக் காடுநோக்கி துறவியாகப் போகிறார்!

பாஞ்சாலி சபதத்தால் பாரதப்போர் வந்ததுபோல்
வைந்தமிழாள் அவலத்தால் காங்கேசன் போர்
வந்ததம்மா
பஞ்சமா பாதகரோ சவப்பாடை ஆக்கவந்தார்!
பண்பான செல்வாவோ வெற்றிமாலை சுமக்க வந்தார்!
அஞ்சாத தமிழரேறே! சிறையிலே கண்ணீர் கொட்டும்!
என்னருமைக் கண்மணிகாள்! சுதந்திரத் தீப்
பொறிகாள்!
துஞ்சாமல் துவளாமல் தமிழுக்காய்ச் சிறையிருக்கும்
துடிப்பான இளைஞர்களே! வெற்றிகண்டு
உளம்மகிழ்வீர்!

தமிழர் வாழ்வு செழிக்கவே செழுந்தமிழும் உயரவே
அமிழ்தாம் கொள்கை பொலிந்தாட வந்தாய்
வாழி நாயகமே!
அமிழ்தாம் கொள்கை பொலிந்தாட வந்ததெல்லாம்
உமிழ்நீர் கொள்கை செத்துவிட எழுந்தாய்
வாழி நாயகமே!
தமிழர் நாட்டில் தமிழ்வாழ முடியாதென்ற நிலை மாற்ற
தாவிவந்து ஒளிபாய்ச்ச வந்தாய்வாழி நாயகமே!
தாவிவந்து ஒளிபாய்ச்சவந்ததெல்லாம் தமிழ்வாழ
தாய்மை கொண்டு பொங்கிடவே வந்தாய்வாழி
நாயகமே!

—ஆனையம்பதி ஆ. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்க மாப்பிள்ளையாக ஆறு நாட்கள் இருந்தேன்"

## புது மாப்பிள்ளை சஹார்த்தனம் அவர்களின் 'சிறை அனுபவம்!'



கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையில் 'புதுமாப்பிள்ளை'யாக திருமணம் செய்துகொண்ட உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சஹார்த்தனம், ஈழத்தமிழர்களின் அடிமை நிலையை உலகறியச்செய்வதற்காக மனித உரிமை தினமான சென்ற டிசம்பர் 10ம்நாள் சென்னையில் உண்ணாவிரதமிருந்த சமயம் சென்னைப்பொலிசாரால் 'அரசாங்க மாப்பிள்ளை' ஆக்கப்பட்ட சம்பவத்தை இக்கட்டுரையில் அவரே சுவைபட எழுதியிருக்கிறார். 'ஆனந்தவிகடனில்' வெளிவந்துள்ள இக்கட்டுரையை இங்கு தந்திருக்கிறோம்.

—ஆர்.

கடந்த டிசம்பர் 10ந் திகதி—உலகம் அதை 'உரிமை நாள்' என்று அழைக்கிறது. இலங்கைத் தமிழர் உரிமைப்பிரச்சினையை இனியாவது உலகம் அறியவேண்டுமென்று சென்னையில் நான் உண்ணாவிரதம் மேற்கொண்டேன். காலை எட்டு மணிக்கு வழக்கமாக 'பேண்ட்' அணிந்து கொள்ளும் நான் வேட்டி கட்டுவதைப் பார்த்த என் தங்கை "ஏதேனும் கல்யாணத்துக்கு ஏற்பாடுகிறீர்களோ?" என்றாள் 'ஆம்' என்றேன். உனக்கு இன்று பெண்பார்க்கப் போகிறோம். மாப்பிள்ளை என்ன செய்து கொண்டிருக்கிறார், என்றுகேட்டால் என்ன சொல்வது?" என்றாள் 'மாப்பிள்ளை மவுண்ட்ரோட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று சொல்' என்றேன். வேடிக்கையாக. ஆறுதான் அரசாங்க மாப்பிள்ளை ஆன பிறகுதான் நான் பேசிய பேச்சின் பொருள் என் தங்கைக்குப் புரிந்தது.

அண்ணாசாலை தபால் நிலையம் முன் நிறுவப்பட்டிருக்கும் நிழல்குடையின் கீழ் உட்கார்ந்தேன். அங்குவந்த பிச்சைக்காரக் கிழவியின் 'எப்பா, நான் உட்காருமிடத்தையா பிடிச்சுட்டே'? என்றபோதுதான் எனக்கு போராட்டம் முதல்லேயே இடப் போராட்டமாகத் தொடங்கியது. பஸ் ஒன்று வந்தது. அதிலிருந்த ஒருவர் 'சார், இவனுக்கென்ன — உடம்பு நன்றாகத்தானே இருக்கிறது' — 'இல்லே, இவி ஜோலியம் போல இருக்கிறது' — 'விளக் கூண்டைக் காணுமே!'

இப்படிப் பேசிக் கொண்டது காதில் விழுந்தது. சிறிது நேரத்தில் கைதுஆனேன். நான் போராடிய போதுதான் குடியரசுக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் சென்னை நகரில் போராட்டங்களை நடத்தின. அவர்களுக்கு எல்லாம் 'சென்ட்ரல் ஜெயில்' செல்லும் அதிர்ஷ்டம் வாய்க்கவில்லை.

எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் காவல் கைதியாக என்னை பன்னிரண்டு நாள் ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துப் போகுமுன் எழும்பூர் நீதிமன்றத்தை ஒட்டிய சிறிய கட்டடத்தில் கைதிகளை அடைத்து வைக்கிறார்கள். அங்கு இன்ஸ்பெக்டர் ஒருவர் — அவருக்கு மீசைக்காரர் என்று பெயர். வழக்கமாக வந்துபோகும் கைதிகள் அபிமானத்துடன் அந்தப்பெயரில் அழைக்கின்றனர். அவர் கைதிகளைக் கணக்கெடுக்கும் போது 'நீ எம். ஜி. ஆர். கோட்டில் தண்டனை பெற்றவரா?" என்றார், எழும்பூர் நீதிமன்றம் ஒன்றில் மஜிஸ்ட்ரேட் ஒருவர் வெள்ளைத்தொப்பி அணிந்து வருகிறார். அவர்

இகழ்த் தினசரிப் பயணமானது. பழக்கப்பட்ட கைதிகள் 'டேய், வசந்த மாளிகை வந்து விட்டது,' என்று சத்தம் இட்டனர். இப்போது கைதிகள் சென்னை சென்ட்ரல் ஜெயிலுக்கு வைத்துள்ள பெயர் 'வசந்தமாளிகை' என்பதாகும்.

மத்திய சிறைச்சாலைக்கு முன் நான்கு பேராய் வரிசையில் அமர்ந்தோம். என் அருகே கல்லூரி இளைஞர்கள் எட்டுப்பேர் 'டவுட்ட[illegible] அருகே சென்ற பஸ்ஸிற்[illegible]

தப்பூசை நடந்தது. 'இவர் கல்லூரிமாணவர், விட்டு விடுங்கள்' என நான் வக்காலத்து வாங்கியதுதான் தாமதம், மேலும் பூசை தொடர்ந்தது. எங்களை அழைத்து வந்த பொலிஸ்காரர் 'சார், மாணவன் என்று மட்டும் இங்கே சொல்லிவிடாதீர்கள்; பொதுவாக மாணவர்கள் சிலர் செய்யும் கலாட்டாவைப் பார்த்துவிட்டு, மாணவர்கள் என்றாலே வெறுப்போடு இருப்பவர்களாக

தண்டனை முழுவதும் கோர்ட்டுக்கு இப்போது எம். ஜி. ஆர் கோர்ட்' என்றுபெயர் கட்டிவிட்டார்கள். 'இல்லை, நான் எம். ஜி. ஆர். கோர்ட் கைதி அல்ல' என்றேன்.

இரவு 8 மணி மத்திய சிறைச்சாலைக்கு கைதிகள் மொத்தம் 63 பேரோடு காவல்துறைவெள்ளை 'வேன்'

இடையூறு விளைவித்ததாகச் சந்தேகப்பட்டுக் கைதானவர்கள். என் அருகே வந்து அமர்ந்த மாணவ நண்பர் ஒருவரைத் திடீரென ஜெயில் 'வார்டர்' ஒருவர், தலையில் படபடவென அடித்தார். அந்த மாணவர் சிறைச்சாலை சுவர் ஓரம் சிறு நீர் கழித்ததால், அந்

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் மாணவர்களாக எப்படியெல்லாம் நடந்தோம்என்பதைமறந்து விடுகிறார்கள்!' என்று அடிபட்டவருக்கு ஆறுதல் கூறினார்.

சிறைக்குள் நுழையுமுன் கைதிகளிடம்உள்ளபொருள்களை, சிறையதிகாரிகள் கணக்கெடுக்கும்போது ஒப்படைத்துவிட்டால்,விடுதலையாகிப்போகும்போது அவற்றைப்பெற்றுக்கொள்ளலாம். பேனு, இடை அரைஞாண், ரூபாய் பெல்ட், தீப்பெட்டி கத்தி ஆகியவை சிறைக்குள்ளே கொண்டு செல்லக் கூடாத சில பொருள்களாகும். பிச்சை எடுத்ததால் பிடிக்கப்பட்டு பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பி வைக்கப் படவேண்டிய வயதானவர் ஒருவர் எங்களோடு இருந்தார். அவர் தன்னிடம் இருந்த கருட்டிய காகிதப் பொட்டலத்தை சிறையதிகாரியிடம் ஒப்படைத்தார். ஏதோ வெற்றிலைப் பொட்டலம் என்று பார்த்தபோது கசங்கிக் கிழிந்த நிலையில் ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. எண்ணியதில் 180 ரூபாய் இருந்தது! அதோடு அவர் தம்மிடமிருந்த வெள்ளியிலான அரைஞாண் ஒன்றையும்ஒப்படைத்தார்.'ஐயா நான் ஏழை — இநூறு ரூபாய்க்கு மட்டும்தான் அதிபதி! என்று அவர் பிச்சை எடுத்துக்கொண்டிருந்திருக்கிறார்.

சிறையில் நான் சந்தித்த கைதி காந்தி, அரசியல்கட்சிகளுக்கெல்லாம் சொந்தமாக இருக்கிறான். சீட்டுக்கட்டு ஜோக்கர் மாதிரி: இந்தி எதிர்ப்புபோராட்டம், ஆசிரியர்கள் போராட்டம்,காங்கிரஸ் நடத்திய விலைவாசிப் போராட்டம், பம்பாயில் சிவசேனு எதிர்ப்புப்போராட்டம் ஆகிய எல்லாப் போராட்டங்களிலும் கைதானவர் காந்தி, 'எந்த நியாயத்திற்கும் போராட நான் முன் நிற்பேன்,' என்று கூறினுரே மகாத்மா காந்தி அதைக் கடைப்பிடிக்கிறார் போலிருக்கிறார் சிறையில் சந்தித்த கைதி காந்தி! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்கிற தாரக மந்திரத்துக்கு சிறைச்சாலையில் ரொம்ப முக்கியத்துவம் இருக்கிறது. ராமசாமி மகன் ஜனார்த்தனம், முத்துச்சாமி மகன் கன்னப்பன் என்று விரிவாக தகப்பனர் பெயரோடு கைதிகளைக் கணக்கெடுக்கும்போது அழைக்கிறார்கள்.

"இவன் தந்தை என்ன தவம் செய்தானே! மகன் இங்கே இருக்கிறான்' என்ற குறளின் கருத்தைப் பிறருக்கு இது நினைவூட்டுவது போலிருந்தது.

## தந்தைக்கு மாபெரும் வெற்றி...

—1-ம் பக்கத் தொடர்

டல்களிலும் — பயமுறுத்தல்களிலும் மயங்கிவிடாது தமிழர் கூட்டணியின் பக்கமே தமிழினம் நிற்கிறது; என்றும்நிற்கும் என்பதை இடைத்தேர்தல் முடிவு மூலம் திட்டவட்டமாக எடுத்துக் காட்டிவிட்டனர்!

புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டதாக இதுவரை பொய்ப்பிரசாரம் செய்துவந்த ஆட்சிபீடத்தினர் — இனி அவ்விதம் பொய்ப்பிரசாரத்திலீடுபடமுடியாதவாறு காங்கேசன்துறைத் தமிழ் வாக்காளர்கள் தந்தை செல்வாவுக்கு பெருவெற்றியீட்டிக் கொடுத்ததன்—சிங்கள ஏகாதிபத்தியத்தினதும், அதன் கையாட்களினதும் வாயில் மண்ணைப்போட்டுவிட்டனர்!

புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக அரசு நடத்தி வந்த பொய்ப் பிரசாரத்தைப் பொடிப்பொடியாக்கிடவும், தம்மை இழிநிலைக்குத்தள்ளியுள்ள அச்சட்டத்தை தமிழ்மக்கள் இன்றும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்; அதற்கு எதிராகதொடர்ந்து போராடி தமது சுதந்திரத்தை நிலை நாட்டுவதில் உறுதி பூண்டிருக்கின்றனர் என்பதை ஆட்சியாளருக்கும் அகிலத்துக்கும் எடுத்துக்காட்டுவதற்காகவுமே மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் தன்னுடன் போட்டியிடுமாறு சிங்கள அரசுக்கு சவால் விடுத்து—1972ம் ஆண்டு அக்டோபர் 3ம் திகதி தமது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியைத்துறந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## நாராயன்பிட்டி இந்துமன்றம்

நாரன்பிட்டியாவில் பிரதானமாக இந்து ஆலயம் அமைக்கவும் மற்றும் சமய சமூகப் பணிகள் செய்யும் நோக்கத்துடன் 27-1-75 சோமைதி இரவு மைதப்பூக்கில் அன்று நாராயன்பிட்டி இந்து மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

தலைவராக சைவப் பேரவைத் தலைவரும், நிலஅளவைத் திணைக்கள பிரதி அதிபதியுமாகிய திரு. வே. பிரகாசசுந்தரமும், துணைத் தலைவர்களாக திரு. ஆர். ராஜாராம், திரு. ச. நடராசா, திரு. எம். ஆர். கிருஷ்ணபிள்ளையும், செயலாளராக திரு. வேலுப்பிள்ளை, மகேந்திரனும், துணைச்செயலாளர்களாக திருமதி நல்லலிங்கம் திரு. கரவை க. வீரபாகு, அவர்களும் பொருளாளராக திரு. ச. தியாகராசாவும், துணைப் பொருளாளர்களாக திரு. க. பாலசுந்தரமும், திரு. மு. சுந்தரலிங்கமும், தெரிவு செய்யப்பட்டார்கள்.

11 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பொது மக்கள், இந்து மன்றங்கள், சைவப் பேரவைகள் திருப்பணிச் சபைகள் "நாராயன்பிட்டி இந்து மன்றம்" 26/2, டாவியில் அவன்யூ, பரிபா வீதி, கொழும்பு 5 என்ற விலாசத்[illegible] [illegible] [illegible]றனர்.

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளை உரையுடன் எமது தயாரிப்புக்களில் ஒன்றான பார்சோப் மேலுறைகளில் அச்சிட்டு வருகிறோம். வாங்கிப் படித்துப் பயனடையுங்கள்.

மில்க் வைற் பார் சோப் ரூ. 3 சதம் 50 மட்டுமே.

தரமான மில்க்வைற் தயாரிப்புக்களைப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

ஓர் அன்பான வேண்டுகோள்

ஈகையில் இறைவன் வெளிப்படுகிறன்

தோட்டஞ் செய்ய விரும்புகிறவர்களை நாம் ஊக்கப்படுத்துவோம். உங்களிடம் மேலதிகமாக உள்ளவற்றை மற்றவர்களுக்கும் கொடுத்துதவுங்கள். குடியேற்றப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு நாங்கள் ஒத்துதவி செய்வோம். உங்களிடம் விதைகள் நாற்றுக்கள், மரவள்ளித்தடிகள், வத்தாளங்கொடிகள் மேலதிகமாக இருந்தால் அவற்றை யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தாரிடம் கொடுத்துதவுங்கள், அவர்கள் இவற்றைக் குடியேற்றப் பகுதிகளில் விநியோகஞ் செய்வார்கள்.

விவசாயம் நாட்டின் சுபீட்சம்.

நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை

க. கனகராசா,
திருஆலவாய்,
யாழ்ப்பாணம் 3.2.75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் சிங்கள ஆதிக்கம்!

# இதை நொறுக்கிட தமிழினம்

# பொங்கியெழ வேண்டும்!

இலங்கை, வெளிநாட்டாருக்கு ஒரு புதிர் என்பார்கள் ஆனால் பல சமயங்களில் இலங்கையில் உள்ளவருக்கும் ஈழம் ஒரு புதிராக விளங்குவது விந்தையிலும் விந்தையே!

இலங்கையின் மொழிகள் ஏறத்தாழ ஆறு என ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆயினும் வாழும் ஒன்றே கால் கோடி மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றியெட்டு பேர் இருபெருமொழிகளுள் ஒன்றினை பேசுவோராகவே உள்ளனர். தமிழ், சிங்களம் ஆகியமொழிகளே இலங்கை மொழிகளுள் பெருமொழிகளாகும். மேலும் இம்மொழிகளை பேசுவோர் எங்கும் பரவிக் கலந்திருக்கவில்லை; மாறாக ஒவ்வொரு மொழியும் தனித்தனி எல்லைகளுள் குழுமி வாழும் மக்களால் பேசப்படும் நிலையே காணகிடைக்கிறது. இவ்வடிப்படையின் விளைவாகவே மக்கள் மொழிவழியாகப் பிரிந்து தென்படுகின்றனர். இதனை மறந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய ஆங்கிலேயர், வகுத்த அரசியல் முறையே, இன்றைய அவல நிலைக்கு முக்கிய காரணமாகும்.

### மொழிவழித்தேசிய இனங்களின் கூட்டு இலங்கை!

ஆக இலங்கை மக்கள் என்னும்போது மொழிவழித் தேசிய இனங்களின் கூட்டு என்பதேமெய். இதனை காணமறுத்து, தமிழ்தேசிய இனத்தின் தனித்தன்மையை அழித்து, ஒட்டு மொத்தமாக ஒன்றேகால் கோடியும் ஒரு மக்களினம் என எண்ணத் தலைப்படுவதில் சதியெண்ணம் தெரிகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இலங்கை அரசியல் சட்டம் இந்த உண்மைக்கு தரவேண்டிய மதிப்பினைத் தராததால் விளைந்துள்ள சிக்கல்களும் கொடுமைகளும் அதிகம். அவற்றுள் மொழிச்சிக்கலும் கொடுமையும் நமது பரிசீலனைக்குரியவை.

மொழி ஒரு பிரச்சினையாகவோ சிக்கலாகவோ ஆவானேன்? இலங்கை முழுமைக்கும் ஓரரசு என்ற எண்ணம் இலங்கை அரசியல் சட்ட ஆக்கத்திற்கு சக்தி வாய்ந்த பின்னணியாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் இரு வேறு மொழிகள் பேசும், வேறுபட்ட கலாச்சாரங்களை கொண்ட இரு மாநிலங்களாக இலங்கை அமைந்துள்ளது. எண்ணிக்கையில் குறைவாக உள்ள தமிழ் மாநிலம் உரிமைப்பறிப்பால் உருவிழக்க, மத்திய அரசு அதிகாரப்பெருக்கத்தால் நாளும் வீங்கி வரும் நிலை இருந்து வருகிறது. வலிமை பெருகிவரும் நடு அரசு இருமொழி மக்களின் இடையே ஒரு மொழி மக்களின் கையில் வசமாக வலிந்து இடக்கிறது. அவர்களுக்கு இவ்வாய்ப்பினை அளித்திடும் சாக்கு மக்கள் தொகையில் தமிழ் மக்களை காட்டிலும் சிங்கள மக்கள் கூடியுள்ளனர் என்பது ஒன்றே.

### சிங்கள ஆதிக்கம்

அகப்பட்ட வாய்ப்பு சிங்கள அரசியல் வாதிகள் பலருக்கும் ஆதிக்கவெறியை மூட்டுவது இயல்பு — இதில் வலதுசாரி, இடதுசாரி, முற்போக்கு, பிற்போக்கு என்ற பேதங்கள் கிடையா, பிளவுகள் கிடையா.

தேசிய இனங்களின் முக்கியமான பிரச்சினைகள் எழும்போது அவர்கள் மத்தியில் கட்சி எல்லைக்கோடுகள் குறுக்கே நிற்பதில்லை. சிங்கள மக்களின் நலன் கருதி தமிழ் மக்களின் உரிமைகளை பலியிடவும் தயங்கார். இதற்கு அவர்களின்

ஆம் சிங்களத்துக்கே அப்பாத்தியதை உண்டு என நிலை நாட்டும் வகையிலேயே அச்செயல்கள் அமைந்துவிடும். கடும் எதிர்ப்புக்குபின் முணுமுணுத்த வண்ணம் தலைப்பில் ஏறிய சிங்களம் தமிழின் தகுதியுடன் [illegible]ர்ந்துவர இசைகிறது.

[illegible]இராணுவத்தில் சிங்கள தேர்ச்சியில்லாமல் இடம் கிடைப்பதென்பது முயல் கொம்பாகிவிட்டது. அரசாங்க இலாகாக்களில் சிங்களம் கற்றுத்தேறுமுன் பதவி உயர்வில்லை என்பது நடைமுறை விதியாகிவிட்டது.

சிங்களத்தகைமையில்லாதவர்களுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் அறவே கிடையாது. அந்நிய ஆங்கிலேயரால் விலக்களிக்கப்பட்ட அரசாங்க இந்

**தி. கதிரைவேற்பிள்ளை**

செயல்முறை உதாரணங்கள் பலவுண்டு. தமது ஆதிக்க வாய்ப்பை பயன்படுத்தி தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்திகொள்ளும் முயற்சிகளில்தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். அவற்றில் மிகமுக்கியமானது சிங்களத் திணிப்பு.

ஓரரசுத் தத்துவத்திற்கு ஒருமொழியாட்சி இன்றியமையாததாகும். எனவே எவ்வளவு விரைவில் சிங்களம் முழு இலங்கையின் நடைமுறை ஆட்சிமொழியாகிறதோ அன்றே ஓரரசு எண்ணம் ஈடேறுகிறது. ஓரரசு முறை நிலைபெறுவதிலேதான் தமது தனி ஆக்க சுகாவரம் பெறும் என்பதையுணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தங்கள் முழுசக்தியையும் பயன்படுத்தி இலங்கை முழுவதிலும் சிங்களத்தை நடைமுறைப்படுத்த பாடுபட்டு வருகின்றனர். அரசு அதிகாரம் அவர்கள் கையில் இருப்பது அதற்கேற்றநல்ல கருவியாக பயன்பட்டு வருகிறது

### அடிப்படை வெற்றி

இலங்கை அரசியல் சட்டத்தில் சிங்களமே ஆட்சிமொழி என இடம்பெற்றுவிட்டது. அந்நிய சக்திகளுக்கு கிடைத்துவிட்ட மிகப்பெரும் அடிப்படை வெற்றி அதை அமுல் செய்வதற்கென்றே ஒரு இலாகாவும் தோன்றிவிட்டது. அந்த இலாகாவின்பணிஒவ்வொரு அமைச்சரின் இலாகாவும் சிங்கள மயமாவதை விரைவுபடுத்துவதாகும். இதன் விளைவாக ஒவ்வொரு துறையிலும் நாளும் சிங்களத்தின் இடம் விரிவடைந்து வருவது கண்கூடு.

ஒவ்வொரு அறிவித்தல்கள், அழைப்புகள், பெயர் பலகைகள், சட்டங்கள், உத்தியோகபூர்வ கடிதங்கள் பதிவுகள், [illegible] தனிச்சிங்களத் தி[illegible] நும் மக்கள் வசதி என்னும் கண்ணோட்டத்தை காட்டி

நாலியர்கள் அனைவரும் சிங்கள அரசாங்கத்தால் இன்று சிங்களம் கற்றுத் தேறுமாறு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

### அபத்தம்

இதற்கு சிங்கள பிரதமர்களின் வாயிலாகவே அபத்தமான வாதங்கள் வெளிவருகின்றன. "கட்டாயப்படுத்தவில்லை; அரசாங்க ஊழியர்களான பின் இலங்கையின் எந்த மூலைக்கும் சென்று பணியாற்ற வேண்டுமல்லவா; எனவேதான் சிங்களம் படிக்கசொல்கிறோம். எனப் பசப்பும் பணி சிங்களப் பிரதமர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஒரு பகுதியில் தமிழும் மறு பகுதியில் சிங்களமுமாக இருமொழிகள் நடைமுறையில் வழங்குகின்றன.

இலங்கையின் எப்பாகத்தில பணியாற்ற செல்கின்றனரோ அப்பாகத்தின் மொழியில் தேர்ச்சிபெறுமாறு அரச ஊழியர்களை சொல்கிறோம் என் சிங்கள பிரதமர்கள் கூறின் அது பொருத்தமாயிருக்கும். பொருத்தமற்றவைகளை நாட்டின் தலைமைப்பீடத்தில் இருப்பவர்கள் அறியாத்தனத்தில் கூறுவார் என எவரும் நம்ப இயலாது. உள்ளதை மறைக்க அவர்கள் விரும்பும்போது ஏற்படும் தவறே இப்படிப்பட்ட அபத்த கூற்றுகள்.

### தரப்படுத்தல்

இலங்கை முழுமைக்கும் சிங்களத்தை நடைமுறைப் படுத்தி விடவேணுமென்ற திட்டத்தில் சிங்கள அரசாங்கம் முனைந்துள்ளதை இனி எவரும்மறைத்து பயனில்லை. இனி தமிழ் மாநிலத்தின் நீதிமன்றமொழி சிங்களமாகவேயிருக்க வேண்டுமென்று சட்டம் வேறு [illegible] ண்மாக தென்படலாம்; ஆயினும் சிங்கள திணிப்பு முயற்சிகளில் இது ஒரு முக்கிய கட்டம்.

கொடுமைகள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளது தமிழ்மொழி மூலம் தோற்றும் மாணவர்களை தரப்படுத்துதலின் கீழ் தரைமட்டமாக்குதல். இது தமிழ் தேசிய இனத்தின் வாழ்வில் மிகப்பயமான அடி.

தமிழ் மாநிலத்தின் நீதிமன்றமொழி தமிழ் இல்லையா? தமிழ்மொழி மூலம் தோற்றும் மாணவர்களுக்கு வாழ்வே இல்லையா? தமிழ் மாநிலத்தில் ஆளும் மொழி தமிழே இல்லையா? சிங்களத்திற்கேதான் அரசாங்க அந்தஸ்து உரித்தா. சிங்களம் தவிர்ந்த மற்ற தேசிய மொழியான தமிழ் தன்னுபடியா? என்கேட்போரின் குரலை தன்னுபடி செய்துவிட்டு நீண்டநாள் ஆட்சி செய்துவிடமுடியாது.

### வேறு வழியில்லை

சிங்கள ஆதிக்கம் அகல மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு தடைக்கல்லாகவுள்ள தமிழ்தேசிய விரோத சக்திகளை இனம் கண்டு தவிடுபொடியாக்க வேண்டும். நெருக்கித்தள்ளப்படவேண்டும்.

இருபதாம் நூற்றாண்டு உலக அரசியலில் கிளர்ச்சி அரசியலுக்குத்தான் மதிப்பும் பயனும் இருக்கின்றது என்ற நிலையில் இதுபோன்ற பிரச்சினைகளில் கிளர்ந்தெழுந்து எதிர்ப்பை தெரிவிப்பதில் நமது மக்கள் தயக்கம் காட்டுதல்கூடாது.

# மன்னிக்க வேண்டுகிறேன்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலின் முக்கியத்துவத்தையும் அதில் மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு காங்கேசன்துறை தொகுதி வாக்காளர்கள் மாபெரும் வெற்றியை அளிக்க வேண்டியதன் அவசியத்தையும்—ஐக்கிய முன்னணி அரசும், கம்யூனிஸ்ட் கட்சியும், புதிய அரசியல் சட்டமும் தமிழ் மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளை எடுத்து விளக்கியும், தமிழ் ஈழம் அடங்கிலுமிருந்து பரவலாகபெருந்தொகையானோர் சுதந்திரனில் பிரசுரிப்பதற்கென உணர்ச்சிபொங்கும் கட்டுரைகளையும் கவிதைகளையும் நகைச்சுவை நாடகங்களையும் நமக்கு அனுப்பியிருந்தார்கள். அவர்களது உணர்ச்சியைப் பாராட்டுவதுடன், அத்தனையையும் சுதந்திரனில் பிரசுரிக்க இடமின்மையே காரணம் என்பதை அவர்களிடம் தெரிவித்து—அதற்காக மன்னிப்புக்கோருகிறோம்.

இடைத்தேர்தலையொட்டி கட்டுரை, கவிதைகள் அனுப்பியுள்ளோரின் பெயர்கள் வருமாறு:—

க. இளையதம்பி, கரவெட்டிகிழக்கு, கரவெட்டி; வே. ரமணன் பண்டத்தரிப்பு; சி. ஆனந்தம், ஜா-எல; அ. புஷ்பராசா, இ. க. அ. க. கிளை, அன்னமலை; எஸ். எம். பாலச்சந்திரன், சண்டிக்குளி, யாழ்ப்பாணம்; பி. மாக்குப்பிள்ளை, முல்லைத்தீவு; செல்வி பவானிபாலசிங்கம், யாழ்ப்பாணம்; நா. கந்தையா, நீர்கொழும்பு; ஆ. செல்வரத்தினம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்; செல்வி தமிழரசி மாலினி வேதநாயகம், கொழும்பு-6; கே. கே. தியாகமாமணி, மாவனல்லை; செல்வி து. விஜயலட்சுமி, பண்டாரிகுளம், வவுனியா; யாழ்வேந்தன், வளலாய், அச்சுவேலி; க. ஐ. துரை, வட்டக்கச்சி; க. செல்வகுமாரன், தமிழ் இளைஞர் பேரவை, கொழும்பு; மு. பரராசசிங்கம், ஆலங்குளாய், சண்டிலிப்பாய்; செ. சுப்பிரமணியம், தலைவர், தமிழ் பண்பாட்டுக்கழகம் சித்தாண்டி; வி. ஆர். லிங்கம், இணுவில்; ச. சூலேந்திரன், யாழ்ப்பாணம்; பொ. ச. பிள்ளை; சி. மு. வாசுயர், கல்முனை; புத்தொளி, அச்சுவேலி; பண்டிதை ஆனந்தன், புலோலிகிழக்கு, பருத்தித்துறை; ஏழாலை—தமிழன்பன்; கனகதவராசன்—முள்ளியவளை; அன்ரன் மனுவேல் பிள்ளை—கொழும்பு-12; தமிழ்ராஜா, மீசாலை; ஏழுவூர்ப் பிதாமபரம்; ம. ஆ. தம்பிநாயகம், உருத்திரபுரம்; த. சி. மணிவண்ணன், மானிப்பாய்; ச. முருகையா, மன்னார்; பா. மகேந்திரன்—மயிலிட்டி; 'தெஹிவலையான்'; வ. கயிலாயபிள்ளை சம்பூர், மூதூர்; சீ. இந்திரன், தெல்லிப்பளை; எஸ். வில்வராஜன், திருக்கோணமலை; தமிழ்மாறன்; அட்டன் 'மாது'; எஸ். கே. மகேந்திரன், (தலைவர் இவுத்தொகுதி த. இ. பே); இ. இரத்தினசோதி—மயிலிட்டி; மல்லாகம்—தில்லா; எம். யே. அரியமலர்—யாழ்ப்பாணம், மன்னார் டானியல் ஜேர்ச்; இ. சிவசுப்பிரமணியம், சிரிமலை; நாக, ரமணிந்திரன்—185, ஹைவலை வீதி, கொழும்பு-5; வைரமு—ராஜன்; செல்வி ரமணி—இரத்தினம், அளவெட்டி; மூதூர் பூமா—மதுரநாயகம்; ஆரையம்பதி ஆ. தங்கராசா; செல்வி திலகா சிவசம்பு—காங்கேசன்துறை; நவ—இளங்கோ; திருமதி. எஸ். கனகரத்தினம், பருத்தித்துறை; கவிஞர் திருமலைக் கலைமாறன்; பரமா; கவிக்கவிராயர்—கல்முனை; —இராவிஜயநாதன், யாழ்ப்பாணம்; வேலணை—வேல்; செந்தில் யோகன்—பன்னாலை, தெல்லிப்பளை; ஐ. ஆ. இராமசாமி, எழுவைதீவு; 'தமிழ்வாமன்'; ச. கா. இளங்கோவன், சங்கானை; தவம்—அழகு; கலைநகர் முருகு—நல்ல சேகரம்பிள்ளை; வண்ணை—ரமணு; தி. கில்லிசான்ஸ், வட்டக்கச்சி; அக்கரை மாணிக்கம்; வண்ணையூர் 'சன்'; மட்டுநகர், செ. குணரத்தினம்; அளவெட்டி மதிமாறன்; கனக மனோகரன்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# "எங்கள் தமிழ் ஈழத்தைவிட சின்னஞ்சிறிய 50 நாடுகள் தனிநாடுகளாக வாழும்போது...

—4-ம் பக்கத் தொடர்

ந்து இந்தோனேஷியா வரை அடுத்தடுத்த முஸ்லிம் நாடுகள் அமைந்துள்ள போதும் அவை ஏன் தமது எல்லைக்கோடுகளை அழித்து ஒரே பிரதேசமாக்கவில்லை? இவையாவற்றையும் நோக்கும்போது நாமும் எமது கலை, கலாச்சாரங்களை, பண்பாடுகளை, மொழி, மத உரிமைகளை பேணித் தனியாக பிரிவதில் தவறு ஒன்றுமில்லை என்பது புலனாகும்.

## தனித்துவத்தை இழக்கதேவையில்லை

"சோஷலிசம் என்பது ஒரு இனம் தனது தனித்துவத்தையும், உரிமைகள் இழப்பது அல்ல. சோஷலிச நாடாகிய சோவியத் நாட்டில் பல்வேறு இனங்கள் வாழ்கின்ற போதும் அவை தமது தனித்துவத்தை இழக்காமல் வாழ்கின்றன. ஒவ்வொரு இனங்களும் தமது கலை, கலாச்சார, பண்பாடுகளை வளர்க்க உரிமை உள்ளவை என்றும் அந்த இனங்கள் அவற்றை வளர்க்க பிரிந்து போக முனைந்தால் கூட அதற்கும் விட்டுக் கொடுக்கவேண்டும் என்றும் மாமேதை லெனின் கூறியிருக்கிறார். ஆகவேதான் எமது கலை, கலாச்சாரத்தை பண்பாட்டை தனித்துவத்தை உரிமையைப்பேண முடியாத நிலையிலுள்ள நாம் அவற்றை பேணககூடிய வழி ஒன்றைச் சமைக்கத் தயாராகி வருகிறோம்.

## சின்னஞ் சிறு 50 நாடுகள்!

வடபகுதிக்கு அடிக்கடி வரும் அமைச்சர்கள் தனிநாடு கிடைக்கமுடியாத ஒன்று என்று கூறுகிறார்கள். அப்படிக் கிடைததாலும் தமிழ மக்கள் சாகவேண்டி ஏற்படும் எனவும் பயப்படுத்துகிறார்கள் எமது தமிழ்ப் பகுதிகளைவிடக் குறைந்த விஸ்தீரணமும் குறைந்த மக்களும் கொண்ட ஐம்பதுக்கு மேறபட்ட நாடுகள் சுதந்திரம் பெற்றுத் திகழ்கின்றன. அந்தவிட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வற்றாத நீர்வளமும், முன்றில் இரண்டுபகுதி கடலும், முத்துராசாயனம், சீமெந்து, கடதாசி போன்றவைகளும் இருக்கின்றன. விவசாயத்துக்கு ஏற்ற ஏராளமான சம தரைகளும் உண்டு. ஏற்றுமதி இறக்குமதிக்குத் திருமலைத் துறைமுகம் உண்டு, இன்னும் எத்தனையோ இயற்கை வசதிகளும், செயற்கை வசதிகளும் உண்டு. ஆகவே நாம் தனி நாடானால் சுபீட்சமாக வாழலாமென்று நாம் நம்புகிறோம்.

2வது மகாயுத்தத்திலே ஜெர்மன் படையெடுத்த போது இங்கிலாந்து மக்கள் எப்படித் தலைவர்களின் கட்டளைப்படி ஒன்றுதிரண்டு தமது நாட்டைக் காப்பாற்றப் போராடினார்கள். 2வது மகாயுத்தத்திலே யூத இனத்தை அழிக்க முயன்ற ஹிட்லர் அம்முயற்சியில் வெற்றி அடையவில்லையே. பங்களாதேஷை மேற்குப் பாகிஸ்தானால் அடக்க முடியவில்லையே. இப்படியான நிகழ்ச்சிகளை நாம் நினைவுகூரவேண்டும்.

## யார் வகுப்பு வாதிகள்?

"தமிழரசுக் கட்சியினரை முதலாளிகளின் கூட்டாளியினர் என்றும், சோசலிசத்தின் எதிரிகள் என்றும் கூறுகிறார்கள். ஐக்கிய முன்னணிக்குள்ளேயே பிற்போக்கு வாதிகள் நிறைந்திருக்கிறார்கள். அந்த உணர்த்தும் வகையில்தான்கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி இரு கூறுகப் பிரிந்து திரு. பீட்டர் கெனமன் தலைமையில் ஒரு கோஷ்டியும், டாக்டர் விக்கிரமசிங்கா தலைமையில் இன்னொரு கோஷ்டியுமாகப் பிரிந்து செயற்பட்டதை யாவரும் அறிவர். இவர்களில் யார் முற்போக்கு வாதிகள், யார் பிற்போக்கு வாதிகள் என்பதை எம்மால் உணர முடியவில்லை அதை அவர்கள் கூறுவார்களா?"

"நாம் எமது உரிமைகளைத் தரும்படி கேட்டால் அதை வகுப்புவாதம் என்கிறார்கள். எது வகுப்புவாதம்? பெரும்பான்மை மக்களின் ஜனநாயகம் என்னும் காலுக்குள் நசிபடும் நாம் எமக்கு விடுதலை வேண்டுமென்று கேட்பதா வகுப்புவாதம்? முற்றத்தில் தன்னிலை மறந்து உலவிக்கொண்டிருக்கும் கோழிக் குஞ்சை பருந்து தூக்கிக் கொண்டு செல்கின்ற கொடிய காட்சியைக் கண்டு நெஞ்சம் குமுறுகின்றோம். அது தவறு? அது வகுப்புவாதமா? இது வகுப்புவாதம் என்றால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு நாம் போராடத் தயார்!"

## ஹிட்லருக்கு நேர்ந்த கதி

"உலக வரலாற்றிலேயே ஒரு தேசிய சிறுபான்மை இனம் பெரும்பான்மை இனத்தால் அழிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. ஆனால் சில சிறுபான்மை இனங்கள் தமது கலை, கலாசாரம், பண்பாடுகளை மறந்து தாமாகவே அழிந்துள்ளன. அடக்கு முறையால் அவை அழியவில்லை. யூதர் இனத்தைத் துப்பாகி முனையில் அழிக்க முற்பட்ட உலகத்திலேயே பெயர் பெற்ற பெரும் சர்வாதிகாரி ஹிட்லர் கூட தனது முயற்சியில் தோல்வி அடைந்தான். அதற்கு பதிலாக அவனே அழிய நேரிட்டது."

"எமக்கென்று மொழி, மதம், கலை, கலாசாரம், பண்பாடுகள் உண்டு. அவை வளரவேண்டும். நாமும் வாழவேண்டும் இதையே நாம் விரும்புகிறோம்.

கடந்த 25 ஆண்டுகளில் முன் ஒரு கட்சியின் தலைவராக இருந்த தந்தை செல்வா இன்று ஈழத் தமிழினத்தின் தலைவராக விளங்குகின்றார். தமிழினத்திற்காக அவர் சிறை சென்றதை நாம் நினைவு கூர வேண்டும். உலகில் எந்த இடத்திலும் ஜீ. சி. ஒருவர் சிறையில் வைக்கப்பட்டதாக இல்லை. தமிழினத்திற்காக போராடி குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை சென்ற முதலாவது ஜீ. சி. தந்தை செல்வாதான்."


இப்பொழுது காட்சிதருகிறது 4வது வாரம்

கொபிட்டி

உங்கள் காலிலிருக்கும் செருப்பு உங்களுக்கு சேவை செய்து தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது ஆனால் உங்கள் கையிலிருக்கும் ஸபப்பு உங்களையே அழிக்கிறது

சாவித்திரி
ஏ. வி. எம். ராஜன
பிரமிளா
மேஜர்
தேங்காய்சீனிவாசன
எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —

வீட்டு மாப்பிள்ளை



மலரே நீ என் மலரல்ல......?

ராசி நல்ல ராசி உன்னை மாலையிட்ட மங்கை மகராசி.

இப்பொழுது காட்சியளிக்கிறது

செல்லமகால் வின்சர் (யாழ் நகர்)

எஸ். வி. சுப்பையா,
சிவகுமார்,
கமலஹாசன்,
ஜெயசித்திரா,
ஸ்ரீ வித்தியா,
சுபா
ஜெயசுதா

திரை, கதை, வசனம், டைரக்ஷன்:
கே. பாலசந்தர்.



ரீகல் நுவரெலியா நெல்சன் திருமலை
திரைகளில் காட்சியளிக்கிறன!

ராஜ ராஜ சோழன் (கலர்)

5வது ஜனத்திரள் வாரமாக

கிங்ஸ்லி லிடோ (யாழ் நகர்)

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் நன்மதிப்பை பெற்ற வண்ணச் சித்திரம்.

ஜெமினி, கே. ஆர். விஜயா, ராஜன், சௌகார் ஜானகி, முத்துராமன், நாகேஷ், சிவகுமாரன், சுந்தரராஜன்.
— நடித்த —

தேவரின்

தெய்வம்

(ஈஸ்ட்மென் கலர்)



2-வது வாரம்

கெப்பிட்டல் பிளாஸா
வெலிங்டன்

ஸ்ரீகாந்த், பிரமிளா, நாகேஷ், குமாரி பானுமதி, சுந்தரராஜன், அசோகன், லக்ஷ்மி (பக)

தேவரின்

கோமாதா என் குலமாதா

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகமாவத்தை 194 எ. இலக்கத்தில் 1975ம் வருடம் பெப்ரவரி மாதம் 2-ம் திகதி ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org